# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

தேர்வு எண்

காலம் : 3-00 மணி **பத்தாம் வகுப்பு - தமிழ்** மதிப்பெண் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (15x1=15)

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ______
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய கிரேக்க அறிஞர் ______
அ) ஹிப்ரு ஆ) ஹிப்பாலஸ் இ) ஹிப்ரோவா் ஈ) மார்டின்

3. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்வு செய்க
அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகை
ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை
இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை
ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ) வானத்தையும், பாட்டையும்
ஆ) வானத்தையும், புகழையும்
இ) வானத்தையும், பூமியையும்
ஈ) வானத்தையும், பேரொலியையும்

5. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் ______
அ) தமிழழகனார் ஆ) கா. அப்பாத்துரையார்
இ) பாவாணர் ஈ) இரா. இளங்குமரனார்

6. காசிக்காண்டம் என்பது ______
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

7. இங்கு நகரப்பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ______ வினா. "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ______ விடை
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

8. *தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்க.*
அ) வயலும் வயல் சார்ந்த இடமும் - மருதம்
ஆ) காடும் காடு சார்ந்த இடமும் - குறிஞ்சி
இ) சுரமும் சுரம் சார்ந்த இடமும் - பாலை
ஈ) மலையும் மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி

9. கருணையன் என்பவர் ______
அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு இ) அருளப்பன் ஈ) மரியாள்

10. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

11. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது?
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

*"விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வன செப்பல்"*

12. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) காசிக்காண்டம் ஆ) விருந்து போற்றுதும்
இ) பெருமாள் திருமொழி ஈ) நீதிவெண்பா

13. இப்பாடலின் ஆசிரியர் ______
அ) நக்கீரர் ஆ) கபிலர் இ) அதிவீரராம பாண்டியர் ஈ) பரணர்

14. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைகள்
அ) விருந்தினனாக, திருந்துற ஆ) இனிது உரைத்தல், வியத்தல்
இ) மகிழ்வன செப்பல், எழுதுதல்
ஈ) நன்மொழி உரைத்தல், வருக என உரைத்தல்

15. 'நன்மொழி' என்பதைப் பிரித்து எழுதுக
அ) நன்+மொழி ஆ) நன்று + மொழி
இ) நன்மை + மொழி ஈ) நல் + மொழி

## பகுதி -2 (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** ***(4x2=8)***

16. தமிழ்நாட்டில் விளையக்கூடிய சிறு கூலங்களின் பெயர்களை எழுதுக.

17. ***விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.***
அ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன்கறியும் பிறவும் கொடுத்தனர்
ஆ) மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்

18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

19. செய்குத் தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" உவமை உணர்த்தும் கருத்து யாது?

21. 'குற்றம்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*** ***(5x2=10)***

22. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்.

23. ***இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
1) மலை - மாலை
2) தொடு - தோடு

24. ***கலைச்சொல் தருக.*** அ) Vowel ஆ) Myth



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

25. ஐந்திணைகள் யாவை?

26. பசுமையான ______ ஐக் ______ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

27. *பகுபத உறுப்பிலக்கணம் தருக. உரைத்த*

28. *சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.*
மேகலை, தேன், பூ, விண், மழை, மணி

பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு சுருக்கமாக விடையளிக்க.* *(2x3=6)*

29. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" வினவுவது ஏன்?

30. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

31. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்கிறது.

அ) திறன் பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?

ஆ) செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?

இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?

பிரிவு - 2

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*
*(வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)* *(2x3=6)*

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?

34. *அடிபிறழாமல் எழுதுக.*

அ) 'வெய்யோனொளி' ..... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக. *(அல்லது)*

ஆ) 'புண்ணியப் புலவீர்' ... எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடலை எழுதுக.

பிரிவு - 3 *(2x3=6)*

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.*

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. தீவக அணியை விளக்குக.

37. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" *- அலகிட்டு வாய்ப்பாடு தருக.*

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.* *(5x5=25)*

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற எழுதுக.

*(அல்லது)*

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. *(அல்லது)*



Padasalai.Net
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

பள்ளியை தூய்மையாக வைத்திருத்தல் குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. தமிழமுதன் என்பவரின் மகன் கபிலன் வீட்டு எண் 144, பாரதிதாசன் நகர் மதுரை என்ற முகவரியில் வசித்து வருகிறார் அவர் அங்குள்ள மேல்நிலைப்பள்ளியில் சேர்வதற்கான சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. இன்சொற்களை பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.

*(அல்லது)*

ஆ) **மொழிபெயர்க்க.** KOOTHU

Therukoothu is its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana Mahabharata and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artist on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms koothu troupe. Through the orchestra singer has a singer, the artist sing in their own voices. Artists dress themselves with heavy customs and bright makeup. Koothu is very popular among rural areas.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.*** ***(3x8=24)***

43. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

*(அல்லது)*

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. அ) கு. அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

45. ***குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.***

அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுபொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) முன்னுரை - இயற்கையோடு இணைந்து வாழ்வோம் - மழைநீரைச் சேமிப்போம் - மரங்கள் வளர்ப்போம் - முடிவு.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner